IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 47/2019
Deposition of witness for DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜகோபால் | Caste | : | |
| Father Name | : | நாராயணசாமி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th day of October, 2025.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

1. 3 வது அயிட்ட தாவா சொத்தின் உரிமையாளர் முனுசாமி என்று சொன்னால் சரிதான். ஏற்கனவே முனுசாமி வாதிக்கு 3 வது அயிட்ட சொத்தை வாய்மொழியாக கிரையம் செய்து விட்டதால் எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. 2ம் அயிட்ட சொத்தை நானும் வாதி பழனியும் சரிபாதியாக முனுசாமியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளோம் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. அதற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் மூன்று அயிட்டங்களும் குறித்து எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. வாதியோடு சேர்ந்து நான் தாவா சொத்தை வாங்க வேண்டும் என்று கேட்டபோது வாதி விருப்பமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுகொண்டு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன். தாவா சொத்தில் வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்ய வேண்டும் என்று 01.03.2019 அன்று முயற்சி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

4. நான் தொடர்ந்து வாதியை தொந்தரவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நான் தான் சுவாதீனத்தில் உள்ளேன் என்று நிருபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3 வது அயிட்ட சொத்துக்குறித்து நான் தாக்கல் செய்துள்ள கணினி பட்டா செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை = இல்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI